# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.37/2022 நாள் : 08.08.2022**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிக்குட்பட்ட வேளச்சேரி புதுத்தெரு மடுவின்கரையில் ரூ.7.33 கோடி மதிப்பீட்டிலான புதிய கழிவுநீர் உந்துநிலையங்கள் அமைக்கும் பணிகளை மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் இன்று (8.8.2022) தொடங்கி வைத்தார்.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிக்குட்பட்ட வேளச்சேரி புதுத்தெரு மடுவின்கரையில் ரூ.7.33 கோடி மதிப்பீட்டிலான புதிய கழிவுநீர் உந்துநிலையங்கள் அமைக்கும் பணிகளை மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் இன்று (8.8.2022) தொடங்கி வைத்தார்.

இன்று (8.8.2022) மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் வேளச்சேரி புதுத்தெரு மடுவின்கரையில் ரூ.7.33 கோடி மதிப்பீட்டிலான புதிய கழிவுநீர் உந்துநிலையங்கள் அமைக்கும் பணிகளை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையில் தொடங்கிவைத்து விழாப் பேருரை ஆற்றியபோது மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது.

சென்னை மாநகரமானது இந்தியாவில் நான்காவது அதிக மக்கள் தொகை கொண்ட நகரமாகும். உலகின் மக்கள்தொகை அடிப்படையில் 36வது பெரிய பெருநகரப் பகுதியாகவும் விளங்குகிறது. தற்போது 426 சதுர கிலோமீட்டர் பரப்பளவிலுள்ள சென்னைப் பெருநகரில் வசிக்கும் சுமார் 85 லட்சம் மக்களுக்கு நாளொன்றுக்கு சுமார் 1000 மில்லியன் லிட்டர் குடிநீர் தினசரி வழங்கப்பட்டு வருகிறது. சென்னைப் பெருநகரம் உபயோகப்படுத்தப்பட்ட நீர் மறுசுற்சி மற்றும் மறுபயன்பாட்டில் முன்னோடியாக திகழ்கிறது.

தொழிற்சாலை பயன்பாட்டிற்கான நீரினை உற்பத்தி செய்வதற்காக 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட 2 எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையிலான சுத்திகரிப்பு நிலையங்கள் (TTRO) ரூ.349.11 கோடி மதிப்பீட்டில் கொடுங்கையூரிலும் மற்றும் ரூ.468.21 கோடி மதிப்பீட்டில் கோயம்பேட்டிலும் அமைக்கப்பட்டுள்ளது.

**விரிவாக்கப்பட்ட சென்னை மாநகரின் எல்லைக்குள் பாதாள சாக்கடைத் திட்டங்கள்:-**

சென்னை மாநகரில் புதிதாக இணைக்கப்பட்ட 42 பகுதிகளில், 17 பகுதிகளில் ரூ.754.51 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் மூலம் 18 இலட்சத்து 80 ஆயிரம் பொதுமக்கள் பயன் பெறுகின்றனர். ரூ.525.77 கோடி மதிப்பீட்டில் 8 பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் முடிவடைந்தால் சுமார் 4 இலட்சத்து 50 ஆயிரம் பொதுமக்கள் பயன் பெறுவார்கள். ரூ.2,810 கோடி மதிப்பீட்டில் 16 பகுதிகளுக்கும் மற்றும் மாதவரம் பகுதியில் விடுபட்ட தெருக்களுக்கும் பாதாள சாக்கடை வசதி அளிக்க திருத்தப்பட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. ரூ.249.47 கோடி மதிப்பீட்டில் மடிப்பாக்கம் பாதாள சாக்கடைத் திட்டப் பணிக்கு 01.08.2022 அன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் மடிப்பாக்கம் பகுதியில் வசிக்கும் சுமார் 58 ஆயிரம் பொதுமக்கள் பயன் பெறுவார்கள்.

ஈஞ்சம்பாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை மற்றும் உத்தண்டி ஆகிய பகுதிகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு மாநில அளவிலான ஒப்பந்தக்குழு மற்றும் மாநில உயர்நிலை வழிகாட்டுதல் குழு ஆகியவற்றின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

**விரிவாக்கப்பட்ட சென்னை மாநகரின் எல்லைக்குள் குடிநீர் வழங்கல் திட்டப் பணிகள்:-**

சென்னைக் குடிநீர் வாரியம், குடிநீர் வசதி இல்லாத இடங்களுக்கு, குறிப்பாக சென்னை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட 42 பகுதிகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தியதன் அடிப்படையில் 22 பகுதிகளுக்கு குடிநீர் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.05.2022 அன்று மாத்தூர், ஜல்லடியன்பேட்டை, இடையான்சாவடி, சடையான்குப்பம் மற்றும் கடப்பாக்கம் ஆகிய பகுதிகளுக்கு ரூ.107.74 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டப் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டப் பணிகளால் சுமார் 77 ஆயிரம் பொதுமக்கள் பயன் பெறுவர். 13 பகுதிகளில் ரூ.352.82 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன்மூலம் சுமார்8 இலட்சம் பொதுமக்கள் பயன் பெறுவர்.

நீலாங்கரை குடிநீர் வழங்கல் திட்டத்திற்கு திருத்தப்பட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, நீலாங்கரை பகுதிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு ஒப்பந்தங்கள் மதிப்பாய்வில் உள்ளது. இத்திட்டப்பணி முடிவடைந்தால் சுமார் 45 ஆயிரம் பொதுமக்கள் பயன் பெறுவர். செம்மஞ்சேரி குடிநீர் வழங்கல் திட்டத்திற்கு ரூ.44 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணி முடிவடைந்தால் சுமார் 50 ஆயிரம் பொதுமக்கள் பயன் பெறுவர்.

**கடல்நீரை குடிநீராக்கும் திட்டங்கள்:-**

சென்னைப் பெருநகர மக்களுக்கு தேவையான அளவு குடிநீர் வழங்கும் பொருட்டு. மீஞ்சூரில் ரூ.500 கோடி மதிப்பீட்டில் 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் மற்றும் நெம்மேலியில் ரூ.570 கோடி மதிப்பீட்டில் 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் ஆகிய 2 திட்டங்கள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேலும் நெம்மேலியில் ரூ.1516 கோடி மதிப்பீட்டில் 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நெம்மேலியிலிருந்து பல்லாவரம் வரை சுமார் 47 கி.மீ நீளத்திற்கு குழாய்கள் பதிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 9 லட்சம் மக்கள் பயன் பெறுவர்.

இந்நிலையில், கூடுதலாக, பேரூரில் 400 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தை ரூ.6078.40 கோடி மதிப்பீட்டில் திட்டத்தை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், 400 மில்லியன் லிட்டர் கடல் நீரை குடிநீராக்கும் நிலையம், பேரூர் மற்றும் போரூர் ஆகிய இடங்களில் நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் நீர் உந்து நிலையங்கள், பேரூர் முதல் போரூர் வரை சுத்திகரிக்கப்பட்ட கடல்நீரை கொண்டு செல்லும் குழாய்கள் பதித்தல், சென்னை மாநகர மக்களுக்கு குடிநீரை சரியாக வழங்கும் பொருட்டு தற்போதுள்ள குடிநீர் குழாய்களை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 29 இலட்சம் மக்கள் பயன் பெறுவர்.

**சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை நிதியின்கீழ் நடைபெறும் பணிகள்:-**

ரூ.125.05 கோடி மதிப்பீட்டில், அடையாற்றில் கழிவுநீர் கலப்பதை தடுக்கும் பொருட்டு 10 பணிகள் நடைபெற்று வருகிறது. அடையாறு, கூவம் மற்றும்

பக்கிங்காம் கால்வாய் வடிநில பகுதிகளில் உள்ள பிரதான நீரோடைகளில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்கும் பொருட்டு, ரூ.401.87 கோடி மதிப்பீட்டில் 36 பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டப் பணிகளின் கீழ், கழிவுநீர் நேரடியாக கலப்பதை தடுத்தல், இடைமறித்து மாற்று வழியில் கழிவுநீர் உந்து நிலையங்களுக்கு கொண்டு செல்லுதல், மாடுலர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகிறது.

ரூ.877.37 கோடி மதிப்பீட்டில், கொடுங்கையூர், கோயம்பேடு, நெசப்பாக்கம், சோழிங்கநல்லூர் மற்றும் பெருங்குடியில் அமைந்துள்ள 902 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட 12 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை புதுப்பிக்கும் / மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

**கழிவுநீர் கட்டமைப்புகளில் தூர்வாரும் பணிகள்**:-

சென்னை குடிநீர் வாரியத்தின் மூலம் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வாரந்தோறும் கழிவுநீர் கட்டமைப்புகளில் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகிறது. பகுதி 1 முதல் 15 வரை உள்ள தெருக்களில் 282 தூர்வாரும் இயந்திரங்கள், 161 ஜெட்ராடிங் இயந்திரங்கள், 57 கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்கள் ஆக மொத்தம் 500 இயந்திரங்கள் மூலம் கழிவுநீர் குழாய்களை பராமரிக்கும் பணிகள் மற்றும் இயந்திர நுழைவாயில்களில் உள்ள கசடுகளை அகற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அடையாறு மண்டலம், கிண்டி, மடுவின்கரை, மசூதிகாலனி ஆகிய பகுதிகளுக்கு ரூ.3.27 கோடி மதிப்பீட்டில் 1.10 எம்.எல்.டி திறன் கொண்ட ஒரு புதிய கழிவுநீர் உந்து நிலையம் அமைக்கும் பணி நடைபெற உள்ளது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 15,000 பொதுமக்கள் பயன் பெறுவர்.

ரூ.4.08 கோடி மதிப்பீட்டில், வேளச்சேரி ஏரியில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்கும் பொருட்டு 3 புதிய கழிவுநீர் உந்து நிலையம் அமைக்கும் பணிகள் நடைபெற உள்ளது. இத்திட்டத்தின் மூலம், கக்கன் நகர், பவானி நகர், சாஸ்திரி நகர், ராஜ்பவன் கால்வாய், வேளச்சேரி 100 அடி சாலை ஆகிய பகுதிகளில் உள்ள சுமார் 17,000 பொதுமக்கள் பயன் பெறுவர். இதன் மூலம், வேளச்சேரி ஏரியில் கழிவுநீர் கலப்பதை தடுக்கப்படும்.

**செய்தி வெளியீடு** : **இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்**
**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்**
**கழிவுநீரகற்று வாரியம்**